# பதுக்கலுக்கெதிராக காவல்துறை நடவடிக்கை

சுண்டுக்குளி சின நூலகம்

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 05 இதழ் 129
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 19 06 1992

(யாழ்ப்பாணம்)
திட்டமிட்டு பதுக்கலில் ஈடுபடுதல், விலை கூட்டி விற்றல் தண்டனைக்குரிய குற்றங்களாகும். இக்குற்றச் செயலில் ஈடுபடுவோர்மீது தமிழீழ காவல்துறையினர் கடுமையான நடவடிக்கையினை மேற்கொள்வார்கள்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும்

[4ம் பக்கம் பார்க்க]

## யாழ். மாவட்டத்தில் மீண்டும் ஊரடங்கு

(கொழும்பு)
யாழ். மாவட்டத்தில் தீவுப் பகுதி நீங்கலாக நேற்றுக் காலை 6 மணி முதல் கால வரையறையின்றி ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்துள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டே ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூட்டுப்படைத் தலைமையகம் அறித்துள்ளது.

(சி)

## நவீன ஆயுதங்கள், கனரக வாகனங்கள் சகிதம்

# யாழ். குடா படையெடுப்பிற்கு முப்படைகளும் தயார்நிலையில்

(கொழும்பு)
யாழ் குடாவில் பாரிய இராணுவ தாக்குதல்களை மேற்கொள்வதற்கான முஸ்தீபு நடவடிக்கையில் முப்படைகளும் தயாராகிவருவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இத்தாக்குதலுக்காக கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகிய முப்படைகளின் எண்ணிக்கை யாழ். குடா முகாம்களில் பெருமளவில் கடந்த சில நாட்களில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இராணுவ தளபாடங்கள், கனரக வாகனங்கள் உட்பட பல நவீனரக ஆயுதங்களுடன் கடற்படையினரின் பலமும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் முற்படைத் தளபதிகளாலும் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையின்போது முப்படைத் தளபதிகளும் களத்தில் நின்று படையினரை வழி நடத்துவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முதல் ஊரடங்கு உத்தரவு காலவரையற்ற நிலையில் பிரகடனப்படுத்தி வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைக்கு சிறிலங்கா படைகள் ஆயத்தமாகியுள்ளன என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (ரி)

## நாடாளுமன்றில் தலைவர் 'பிரபா'

(கொழும்பு)
நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தில் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனின் பெயரை உச்சரிக்காத உறுப்பினர்கள் இல்லை என்றே கூறவேண்டும். (4-ம் பக்கம் பார்க்க)

## இனப் பிரச்னை தீர்வுக்கு நல்ல சந்தர்ப்பம்

[கொழும்பு]
இனப்பிரச்னைக்கு தற்போது தீர்வு காணக்கூடிய நல்ல சூழ்நிலை காணப்படுவதாக அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

அவசரகால சட்ட நீடிப்பு
(4ம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் மோதல் சிப்பாய் பலி

(அம்பாறை)
அம்பாறை மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற மோதல் ஒன்றில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். (சி)

## 34 அகதிகள் படுகொலை

[ஜொகன்ஸ்பேர்க்]
தென் ஆபிரிக்காவில் ஜொகன்ஸ்பேர்க்கில் நேற்று முன் தினம் அகதி முகாம் ஒன்றினுள் நுழைந்த ஆயுதக் கும்பல் 34 பேரை வெட்டியும், சுட்டும் கொலை செய்துமுள்ளது. (4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளை —— தடைசெய்யக் கோருவது மனச்சாட்சிக்கு விரோதமானது - காமினி பொன்சேகா

(கொழும்பு)
இந்தியா செய்ததுபோல் இலங்கையும் புலிகளை தடை செய்ய வேண்டுமென எவராவது கோரினால் அது அவர்களது மனச்சாட்சிப்படி தெரிவிக்கப்படும் கூற்று அல்ல என பிரதி சபாநாயகர் திரு. காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவசரகால சட்டவிவாதத்தில் அவர் மேலும் பேசுகையில்;

விடுதலைப் புலிகளை தமிழ
[4-ம் பக்கம் பார்க்க]

## வடக்குகிழக்கு இணைப்பிற்கு தினேஸ் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)
வடக்கு - கிழக்கு மாகாணத்தை எவ்விதப்பட்டும் ஒன்றிணைக்கக் கூடாதென எம். ஈ. பி. தலைவர் திரு.
(4ம் பக்கம் பார்க்க)

## 3 சிங்கள இளைஞர்கள் முகாமில் சுட்டுக் கொலை

(கொழும்பு)
பல்லேகல தடுப்பு முகாமிலிருந்து தப்பியோட முயன்ற 3 சிங்கள இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜே. வி. பி. சந்தேகநபர்களென பல்லேகல தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் சிலர் தப்பியோட முனைந்தபோதே இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனராம்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளது. [கே-சி]

## வலிகாமம் பகுதியில் உக்கிர ஷெல், பீரங்கி தாக்குதல்

[யாழ்ப்பாணம்)
வலி.வடக்கு, வலி. மேற்கு பகுதிகளை நோக்கி நேற்று கீரிமலை கடற்பிராந்தியத்திலிருந்து பீரங்கித் தாக்குதலும் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஆட்லறி ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டன. இத்தாக்குதல்களினால் பொதுமக்கள் தரப்பில் பலர் காயமடைந்துள்ளதுடன் பல வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுக்காலை 5-45மணி தொடக்கம் இத்தாக்குதல்கள் ஒருமணிநேரம் நடத்தப்பட்டன. சேந்தான்குளம், பண்
[4-ம் பக்கம் பார்க்க]

## மண்டைதீவு ஷெல்லினால் யாழ்நகர் நேற்று அதிர்ந்தது

[யாழ்ப்பாணம்]
மண்டைதீவுப் பகுதியிலிருந்து நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட அகோர ஷெல் தாக்குதலினால் யாழ் நகர் சுமார் அரைமணிநேரம் அதிர்ந்தது.

நேற்றுக் காலை 6 மணியளவில் இத்தாக்குதல் ஆரம்பமானது. கொட்டடி, கோட்டைப் பகுதி, கே.கே.எஸ். வீதி, மைலன்ஸ் கட்டிடம், மனோஹராதியேட்டரடி, கடையிற் சாமி வீதி, நாச்சிமார் கோவிலடி பகுதிகளில் 15 ற்கும் மேற்பட்ட ஷெல்கள் வீழ்ந்து வெடித்து சேதங்களை ஏற்படுத்தின.

நகர்ப்புறம் நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்
(4-ம் பக்கம் பார்க்க)

## ஊர்காவல் படையினர் இருவர் சுட்டுக் கொலை

[யாழ்ப்பாணம்]
வவுனியாவில் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் இரு ஊர்காவல் படையினர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை 9 மணியளவில் வவுனியா 9-ம் யூனிற்றில் ரோந்து வந்த இராணுவத்தினர் மற்றும் ஊர்காவல் படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர்கள்.

[4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

இலகு தமிழ் இலக்கணம் வினா—விடை ரூ 12-50 தமிழ்த்தென்றல் —யாதுமூராரின் கவிதைகள் விலை ரூ. 20-00. எல்லாப் புத்தக சாலைகளிலும் கிடைக்கும். (சி-6424)

**சோபிதா**

பாடசாலை உபகரணங்கள்' அலுவலக உபகரணங்கள்' மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம், 'சோபிதா' 363, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (ஏ-2207)

**"சுவையகம்"**

உங்களுக்கு தேவையான குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கான சகல விதமான எசென்ஸ் வகைகளுக்கும், சிற்றிக் அசிற் என்பனவற்றிற்கும் இன்றே விஜயம் செய்யுங்கள் 'சுவையகம்'' பிரதான வீதி (யூனியன் பெற்றோல் நிலைய அருகாமை) சாவகச்சேரி. (ஏ 2220)


## நல்லின கால்நடை வளர்ப்பு ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லின கால்நடை வளர்ப்பினை ஊக்குவிக்கும் முகமாக செயற்கைமுறைச் சினைப்படுத்தல் மூலம் இனவிருத்தி செய்யப்பட்ட நல்லின கால்நடைகளைப் பெற்று, கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களூடாக வழங்குவதற்கெனத் திட்டம் ஒன்றினை யாழ். மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 6—18 மாதங்களுடைய நாம்பன் மாடுகள் வாங்கப்பட்டு, சிறந்த பராமரிப்பின் கீழ் வளர்க்கப்பட்டு அவை மீள கால்நடை வளர்ப்பாளர்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளன.

# "ஆட்சி அமைக்க எந்தக் கட்சிக்கும் எமது ஆதரவு தேவை' — தொண்டமான்

(பதுளை)

"நாம் ஆளப்படுபவர்கள் என்றே கூறப்பட்டுவந்தது; ஆனால் எம்மாலும் ஆள முடியும் என்பதை நாம் தற்போது உறுதிப்படுத்தியுள்ளோம்.''

இவ்வாறு இ. தொ. கா தலைவரும் உல்லாச கிராமிய தொழிற்துறை அமைச்சருமான திரு எஸ். தொண்டமான் பதுளையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் குறிப்பிட்டார்.

அமைச்சர் தொண்டமான் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

சிங்கள மக்களுக்கென இரண்டு கட்சிகள் உண்டு. இந்த இரண்டு கட்சிகளும் சிங்கள மக்களிடத்தில் சரிசமமான ஆதரவையே பெற்றுக்கொள்ளும் இதனால் எந்தக் கட்சி ஆட்சி அமைக்கவேண்டுமாயினும் எம்மைப்போன்றவர்களில்தான் தங்கிபிருக்கின்றது. அதனால் எமது மதிப்பு அளவுகடந்ததாக இருக்கின்றது. [137]

# கனடாவில் குடியேற அகதிகளுக்கு முன்னுரிமை

(ஒட்டாவா)

கனடாவில் குடியேற்ற வசதி முறைகளை துரிதப்படுத்துமுகமாக கனேடிய அரசு கடந்த செவ்வாயன்று புதிய சட்ட விதிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதேவேளை கனடாவில் வசிக்கும் இரத்த உறவினர்களுக்கும், உண்மையான அகதிகட்கும் செல்வந்த முதலீட்டாளர்களுக்கும் கனடாவில் குடியேற முன்னுரிமை அளிக்கப்படும்.

இவ்வாறு கனடாவில் குடியேற விரும்புபவர்கள் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டு குடியுரிமை வழங்கப்படவுள்ளது. [கே

## 357 பேருக்கு தொழில் முயற்சிக் கடன்

(உடுப்பிட்டி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வடமராட்சிப் பகுதியில் 357 பேருக்கு சுயசார்பு தொழில் முயற்சிக் கடனாக எட்டு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

தொழில் வாய்ப்பில்லாத இடம்பெயர்ந்தவர்களுக்கு சுயதொழிலை ஆரம்பிக்கும் முயற்சியாக இக்கடனை வட்டியில்லாத கடனாக வழங்கியுள்ளது. (150)

## சங்கானையில் 100 குடும்பங்கள் தஞ்சம்

(சித்தன்கேணி)

சங்கானை கலாச்சார மண்டபம் நீதவான் அலுவலகம், ஆகிய இடங்களிலும் உறவினர்கள் நண்பர்கள்வீடுகளிலும் சுமார் 100 குடும்பங்கள் பன்னாலை, அளவெட்டி. தெல்லிப்பளை இளவாலை, முள்ளியான் ஆகிய இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்து தஞ்சமடைந்துள்ளன.

இவர்களுள் 'அ' 'உ, உலர் நிவாரண அட்டைகள் வைத்திருப்போர்களுக்கு ஒரு வாரத்துக்கான இலவச நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [137]

## ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடாத்தும் 10வது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 27ம், 28ம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற உள்ளது.

## பாடசாலை இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

இராணுவ நடவடிக்கை காரணமாக மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாலயம் இம்மாதம் 22ம் திகதி தொடக்கம் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் மாலை நேரப்பாடசாலையாக இயங்குவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. [72]

## மீண்டும் மினிபஸ் சேவை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை யாழ்ப்பாணம் மினிபஸ் சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

கொழும்புத்துறையில் இருந்து காலை 6 45 மணிக்குப் புறப்படும் இந்த மினிபஸ் பாஷையூர், குருநகர் ஊடாக யாழ்ப்பாணம் வந்தடைகிறது. மாலைவரை இச்சேவை நடைபெறுகிறது. (154)

## அளவெட்டி மக்கள் உடுவிலில் தஞ்சம்

(அரியாலை)

அளவெட்டியிலிருந்தும் இராணுவநடவடிக்கையால் மக்கள் இடம்பெயர்ந்து உடுவில் பகுதிக்கு சென்றுள்ளனர். கீரிமலைப்பகுதியிலுள்ள சேந்தான்குளத்திலிருந்து இராணுவத்தினர் துப்பாக்கி பிரயோகம் செய்வதால் இளவாலை மாரீசன்கூடல் மக்களும் பெருமளவு இடம்பெயர்ந்துள்ளனர். (59)

# முல்லைத்தீவுப் பகுதியில் தமிழர் சொத்துக்கள் சூறை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் பகுதியிலுள்ள அலம்பிலுக்கும் குமுளமுனைக்குமிடையில் அண்மையில்மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் தமிழ் மக்களின் சொத்துக்கள் பெருமளவில் சூறையாடப்பட்டு நாசமாக்கப்பட்டுள்ளன.

குமுளமுனையில் தமிழ் மக்களின் 30 வீடுகளும் கோவில்களும் பாடசாலைகள் ப. நோ கூ. சங்கங்கள் முதலியன வியானக் குண்டு வீச்சுக்களினால் நாசமாக்கப்பட்டுள்ளன.

உப்புவெளி, உடப்புச்குளம் சிலாவத்துறை ஆகிய இடங்களில் உள்ள தமிழ் கடல் தொழிலாளர்களின் 3கோடி ரூபா பெறுமதியான மீன்பிடி சாதனங்கள் இராணுவத்தினரால் நாசமாக்கப்பட்டதினால் இப்பகுதிகளில் உள்ள கடல் தொழிலாளர்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

# பனம்பொருள் உற்பத்தி அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

பனம்பொருள் உற்பத்தியில் ஈடுபடும் 13 தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பனம் அபிவிருத்திச் சபை ஆகியன பனம் பொருள் உற்பத்தியில் கணிசமான அளவு அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளன.

1990-ம் ஆண்டு காலப் பகுயில் 132,038 போத்தல்கள் பதனீரும், 1991-ம் ஆண்டு காலப் பகுதியில் 2,954 905 போத்தல்கள் பதனீரும், 1992-ம் ஆண்டு ஏப்ரல் வரையான காலப் பகுதியில் 1 933,481 போத்தல்கள் பதனீரும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

1990-ம் ஆண்டில் 7,476 போத்தல்கள் பனம்பாணியும், 1991-ம் ஆண்டில் 163,334 போத்தல்கள் பனம் பாணியும், இவ்வாண்டு ஏப்ரல் வரையான காலப்பகுதியில் 191, 323 போத்தல்கள் பனம் பாணியும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 1990-ம் ஆண்டு 3,565 கிலோ பனம் வெல்லமும், 1991-ம் ஆண்டு 97,336 கிலோ பனம் வெல்லமும் இவ்வாண்டு ஏப்ரல் வரையான காலப்பகுதியில் 15,475 கிலோ பனம்வெல்லமும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் புள்ளி விபர கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

## பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சிறுவர்களுக்கான பண்ணிசைப்போட்டி சுழிபுரம், போறூட், பயிற்சி நிலையத்தில் இம்மாதம் 21ம் திகதி ஞாயிறுகாலை 9 மணிக்கு நடாத்தப்படும் இதில் பங்குபற்றும் எல்லா மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.


# எம் அன்புத் தெய்வங்களின் நினைவஞ்சலி



| திருமதி<br>அ. அந்தோனியாப்பிள்ளை | அமரர்<br>நீ. அந்தோனி பிள்ளை<br>(நாகசெட்டி) |
| --- | --- |
| தோற்றம்: 15-10-1918<br>மறைவு: 19-06-1986<br>6-ம் வருடம் | தோற்றம்: 04-04-1908<br>மறைவு: 07-04-1983<br>9-ம் வருடம் |

எம் அன்புத் தெய்வங்களை அன்புடன் நினைவு கூருகின்றோம். அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைஞ்சுவோம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
நாகசெட்டி கமம்,
நாவற்குழி.

பற்றிமா வாசா,
சில்லாலை.

(சி-6430)

# 13-ம் ஆண்டு நினைவஞ்சலி



## இராசமணி மகேசன்

தோற்றம்: 02-02-1909 — மறைவு: 19-06-1979

எம் அன்புத் தெய்வமே! ஆண்டுகள் 'பதின்மூன்று சென்றாலும் உங்கள் அன்பு எங்களை விட்டு அகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்.
உறவினர், நண்பர்.

லிங்கவாசா,
நவாலி.

(சி-6434)

# நாஸி தலைவர் ஹிட்லரை மன்னிப்பு கேட்கவைத்து உலகை பிரமிப்பில் ஆழ்த்திய செண்பகராமன்!

"வெள்ளையனே வெளியேறு" என்ற அடிப்படையில் இந்தியாவில் சுதந்திரப் போராட்டத்தை அகிம்சை வழியில் நடத்திவந்த விடுதலை வீரர்களையும் மறைமுகமாக ஆயுதம் ஏந்திப்போராடிய போராளிகளையும் உணர்ச்சியடைய வைத்த சொல் "ஜெய் ஹிந்த்".

இந்தச் சொல்லை முதலில் இந்தியர்களுக்கு சொல்லிக் கொடுத்தவர் ஒரு தமிழர்!

வெள்ளையர்களின் ஆட்சிக் காலத்தில் சுதந்திர வேட்கையாக இந்தியா முழுவதும் திரண்டுநின்று போர்க்கொடி ஏந்திய நேரத்தில், தமிழ் நாட்டிலுள்ள கிராமமொன்றில் 'செண்பகராமன்' என்ற தமிழ் இளைஞர் ஒருவர் தன் சகாக்களில் ஒரு சிலருடன் சுதந்திரப்போட்டத்துக்கான தன் பங்களிப்பை பல வழிகளிலும் வழங்கி வந்தார்.

செண்பகராமனை முளையிலேயே கிள்ளிவிட வெள்ளையர் படையினர் முயன்றபோது செண்பகராமன் மிக சாதுரியமாக ஜெர்மனிக்குத் தப்பிச் சென்றார்.

ஜெர்மனிக்குச் சென்ற செண்பகராமன் முதலில் அங்கு தன் கல்வியிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தினர். ஐரோப்பிய மொழிகள் அனைத்தையும் படிப்படியாகக் கற்று ஒவ்வொரு மொழியிலும் பட்டம் பெற்றார்.

இதன் பின்பு பிரெஞ்சு மொழி, ஜெர்மன் மொழிகளில் இந்தியாவில் வெள்ளையர் செய்யும் அட்டூழியங்களை வெளிப்படுத்தும்முகமாக பல நூல்களை வெளியிட்டார்.

ஜெர்மனியில் இராணுவப் பயிற்சிகளைக் கற்றுக்கொண்ட செண்பகராமன் பலஇராணுவ சாதனங்களை உற்பத்தி செய்வதற்கும் உறுதுணையாக இருந்தார். இதனல் குறுகிய காலத்திலேயே இராணுவத்தில் பல உயர் பதவிகளுக்கு உயர்த்தப்பட்டார்.

பின் ஜெர்மன் நாட்டின் கடற்படை நீர் மூழ்கிக் கப்பல் படைக்குத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

இக்காலகட்டங்களில் இந்தியாவில் சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் மறைமுகமாக வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக நடைபெற்ற ஆயுதப் போராட்டத்திற்கு செண்பகராமன் ஜெர்மனியிலிருந்து இரகசியமாக ஆயுதங்களை அனுப்பிவைத்து தனது ஆதரவையும் கொடுத்துவந்தார்.

முதலாவது உலக யுத்தம் மூண்டகாலத்தில் செண்பகராமனின் தலைமையிலான நீர்மூழ்கிக்கப்பல் படைப்பிரிவு திடீரென தமிழ்நாட்டிலுள்ள கொச்சி, தூத்துக்குடித்துறை

'தேவா'

முகங்களைத் தாக்கித் தரைமட்டமாக்கியதுடன் வெள்ளையர்களின் வாணிப போக்குவரத்துக்கு முற்றுப்புள்ளியும் வைத்தது.

முதலாவது உலகப்போர் முடிவடைந்த காலத்தில் செண்பகராமனைச் சந்திப்பதற்காக சுபாஸ் சந்திர போஸ் பல சிரமத்தின் மத்தியில் ஜெர்மனிக்குச் சென்றார்.

சுபாஷ் சந்திரபோஸை ஜெர்மனியில் சந்தித்த செண்பகராமன், சந்தோஷத்தாலும் உணர்ச்சிப்பெருக்காலும் 'ஜெய் ஹிந்த்' என உரக்கக் கூறி அவரைக் கட்டித்தழுவினர்.

செண்பகராமன் கூறிய 'ஜெய் ஹிந்த்' என்ற சொல் சுபாஷ் சந்திரபோஸின் மனதில் ஆழமாகப் பதிந்தது

மாபெரும் விருந்தொன்றில் இந்தியர்களின் கலைகளைக் கேவலமாகக் கேலி செய்த ஹிட்லரை அதே இடத்தில் மன்னிப்புக் கோரவேண்டுமென செண்பகராமன் ஹிட்லரைப் பார்த்துக் கூறினர். ஹிட்லரும் தன் தவறை உணர்ந்து அதே சபையில் செண்பகராமனிடம் மன்னிப்புக் கோரினர்.

இதன்பின் செண்பகராமனைக் கொலை செய்யத் திட்டமிட்ட ஹிட்லரின் நாஸிப் படைகளுடன்செண்பகராமன் பெரும் போராட்டம் நடத்தினரி.

இறுதியில் இறப்பதற்கு முன் தன்னுடன் வாழ்ந்து வந்த மனைவியிடம் "நான் இறந்ததும் என் உடலை எரித்து அதன் சாம்பலைப் பாதுகாத்து வைத்துக் கொள். இந்தியா சுதந்திரம் அடைந்தபின்பு என் சாம்பலை என்நாட்டுக்குக்கொண்டு சென்று கங்கைநதியில் சங்கமமாக்கிவிடு" என்று கூறிய போது அவர் உயிர்பிரிந்தது.

1947ம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்தபின் பிரதமர் நேரு இந்தியாவின் போர்க் கப்பல் ஒன்றை ஜெர்மனிக்கு அனுப்பி செண்பகராமனின் அஸ்தியையும் அவர் மனைவியையும் இராணுவ மரியாதையுடன் இந்தியாவுக்கு வரவழைத்தார்.

செண்பகராமனின் அஸ்தி அவரின் சொந்த ஊரான திருவனந்தபுரத்தில் மக்கள் அஞ்சலியின் பின் கங்கையுடன் சங்கமமாக்கப்பட்டது. (வி)

## தபால் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

இராணுவ நடவடிக்கையினுல் இளவாலை உபதபாலி அலுவலகமும் மாரீசன்கூடல் உபதபால் அலுவலகமும் தொடர்ந்து செயற்படமுடியாது மூடப்பட்டுள்ளது.

இளவாலை உபதபால் விநியோகப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தங்கள் கடிதங்களை பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. [72]

## சங்கீத ஆசிரியர்களுக்கு பட்டதாரிச் சம்பளம்

[வட்டுக்கோட்டை]

இந்தியாவில் நான்கு வருடக்கற்கை நெறியை மேற்கொண்டு பயிற்சியை முடித்துக்கொண்ட சங்கீத பூஷணம் சங்கீத வித்துவான் பட்டங்களைப் பெற்று சங்கீத ஆசிரியர்களாகச்சேவைசெய்துவரும் சங்கீத ஆசிரியர்களுக்கு பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படவுள்ளது.

இத்தகைய ஆசிரியர்களுக்கு 1985ஜனவரி 16ம்தேதி முதல் பட்டதாரிகளுக்கான சம்பளம் வழங்கப்படும்.

1985 ஜனவரி 1ம் தேதிக்கு முன்னர் இளைப்பாறிய ஆசிரியர்களுக்கு இச்சம்பளம் வழங்கப்படமாட்டாது.

1-1-1985க்குப் பின்னர் இளைப்பாறிய ஆசிரியர்களுக்கான சம்பளமும் மாற்றியமைக்கப்பட்டு அதிகரித்த சம்பளம் வழங்கப்படுவதோடு ஓய்வூதியமும் அதிகரித்த சம்பளத்திற்கேற்ப வழங்கப்படவுள்ளது. (139)

## "முதலுதவி அளிப்பது மிக அவசியம்"

(யாழ்ப்பாணம்)

"இராணுவ நடவடிக்கைகள் நிறைந்த இன்றைய காலகட்டத்தில் எதிர்பாராத விதமாக பாதிக்கப்படும் பொதுமக்களுக்கு முதலுதவி அளிப்பது மிகமிக அவசியமானது."

இவ்வாறு யாழ். மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலைய 24-வது சுகாதார சேவைப் பயிற்சி நிறைவு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை கூறினர்.

இவ்வைபவத்தில் யாழ். ஆயர் மேலும் உரையாற்றுகையில்;

முதலுதவி பயிற்சி பெற்று இன்று நீங்கள் கிராமம் கிராமமாகச் சென்று முதலுதவி முறைகளை பொதுமக்களுக்கு விளக்கிக்கூறுங்கள் வைத்திய வசதிகள் இல்லாமல் இன்று அவதிப்படும் பாமரமக்களுக்கு உங்களுடைய சேவை மிக முக்கியமானது.

யாழ் மறைமாவட்ட மனிதமுன்னேற்ற நடுநிலைய இயக்குநர் வண. ம இ பயஸ் தலைமையில் நேற்று நடைபெற்ற இவ்வைபவத்திற்கு திரு. ஞா. அருளானந்தம் வரவேற்புரை நிகழ்த்தினர். (வி)

## நிவாரண அட்டைகளை இழந்தவர்கள் பாதிப்பு

[காங்கேசன்துறை)

வலி. வடக்கிலிருந்து இராணுவ நடவடிக்கையால் அண்மையில் வெளியேறிய பலர் நிவாரண அட்டைகள் மற்றும் தஸ்தாவேஜுகளைவிட்டு வந்தமையால் நிவாரண உதவிகளைப் பெற முடியாமல் கஷ்டமுறுகின்றனர்.

திடீர் இராணுவ நடவடிக்கையால் அவசர அவசரமாக தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிய இம்மக்கள் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த நிவாரண அட்டைகள் மற்றும் தஸ்தாவேஜுகளை விட்டு வந்ததாகவும் திரும்பவும் தமது இருப்பிடங்களுக்குச் செல்ல முடியாமல் போனதாகவும் கூறுகின்றனர்.

இப்படியான பலர் தற்போது வழங்கப்படும் நிவாரண உதவிகளைப் பெறமுடியாமல் அலைந்து திரிய வேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. (86)

## இராணுவ நடவடிக்கையால் ஒன்பது ப. நோ. கூ. ச. கிளைகள் மூடப்பட்டது!

[டண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் இராணுவ நடவடிக்கையினுல் இடம்பெயர்ந்த மக்களின் நலன் கருதி இரு விசேடகிளைகளை டண்டத்தரிப்பு பிரதான வீதியில் திறந்துள்ளது.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த பகுதிகளிலுள்ள 9 கிளைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இளவாலை இல. 12 கிளை, மக்குவில் இல. 15 கிளை, சித்திரைமேழி இல. 7-கிளை, புனித. யாகப்பர் இல. 22- கிளை, காஞ்சிபுரம் இல. 25 கிளை, நுணசை இல.4 கிளை, சிறுவிளான் இல, 17 கிளை, பேயிட்டி இல. 24 கிளை, மாரீசன்கூடல் இல. 5 கிளை ஆகிய கிளைகளே செயற்படமுடியாத நிலையில் மூடப்பட்டிருக்கும் கிளைகளாகும்.

பண்டத்தரிப்பு பிரதான வீதியில் திறக்கப்பட்டிருக்கும் விசேட கிளைகளில் உணவு முத்திரைக்கான பொருள்களை பெற்றுக் கொள்ளமுடியும் என்று சங்கப் பொதுமுகாமையாளர் திரு. வைரவநாதன் இது பற்றி நேற்று தகவல் தருகையில் தெரிவித்தார். [72)

## கரையோரப் பகுதி: பாலை மீன் வளர்ப்பு திட்டம் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் கடந்த ஆண்டு இறுதியில் குருநகரில் ஆரம்பிக்கப்பட்ட பரீட்சார்த்த பாலைமீன் வளர்ப்புத்திட்டம் பூர்த்தியாகியுள்ளது.

இப்பரீட்சார்த்த திட்டத்திற்கெ இரண்டாயிரம் வரையிலான பாலைமீன் குஞ்சுகள் மன்னர் மாவட்டத்தில் கிராஞ்சியிலிருந்து கொண்டு வரப்பட்டு குருநகர் வளர்ப்பு நிலையத்தில் விடப்பட்டன. 2.5 செ. மீ. நீளத்துடனும், 5 கிரும் நிறையுடனும் விடப்பட்ட இம்மீன் குஞ்சுகள் 5 மாத காலத்தில் சராசரியாக 28 5 செ மீ. நீள வளர்ச்சியுடனும், 175.0 கிரும் நிறை வரையிலான வளர்ச்சியினைப் பெற்றுள்ளது.

இலங்கை அரசினல் மேற்கொள்ளப்பட்ட நீர்கொழும்பு பிற்றப்பண்ணை பரீட்சார்த்த பாலைமீன் வளர்ப்புத்திட்டத்தில் 5 மாத காலத்தில் மீன்கள் சராசரியாக 24 8 செ மீ. நீளத்தையும், 87.8 கிரும் நிறையுமே கொண்டிருந்தன என்பன இங்கு குறிப்பிடத்தக்கது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடற்தொழிலாளர் பலர் வேலை வாய்ப்பினை இழந்துள்ளதுடன், மீனிற்கான விலையும்ஏற்றமடைந்துள்ளது. இந்நிலையில் கடல்நீர்த்தொடுவாய்கள் மற்றும், கரையோர ஆற்றுப்பகுதிகளில் இவ்வாறன திட்டங்களை நடைமுறைப் படுத்துவதன் மூலம் பலருக்கு நேரடி மறைமுக வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கும் மீனிற்கான விலையேற்றத்தைக் குறைப்பதற்கும் தமிழீழத்தில் இனங்காணப்படாத வளங்களைக் கண்டறிந்து பயன்படுத்துவதற்கும் ஏதுவாக அமையும்.

மல்லாகம்

## தபாலகம் இடமாற்றம்

(ஏழாலை)

மல்லாகம் தபாலகம் இராணுவத்தாக்குதல் காரணமாக கடந்த மாதம் 6ம் திகதி மல்லாகம் நீலியம்பனைப்பிள்ளையார் கோவில் முன்பாகத் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தவர்கள் தமக்குரிய கடிதங்களை இங்குநேரில் சென்றுபெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (154)

விண்ணப்ப

## முடிவு திகதி நீடிப்பு

(கொழும்பு)

சுங்கத் திணைக்கள அதிகாரிகள் பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

மே மாதம் 2ம் திகதி வர்த்தமானி மூலம் கோரப்பட்ட இப்பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஜூன் 19ம் திகதிக்கு முன் அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண விண்ணப்பதாரிகளுக்கு போதிய அவகாசம் கொடுக்கப்படவில்லையெனகோரிக்கை விடப்பட்டதனையடுத்து, இறுதித் திகதி ஜூன் 30ம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது. (கே)

## தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கப் பகுதியில் 17 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்வு; சங்க தொழில் முயற்சி ஸ்தம்பிதம்

[காங்கேசன்துறை)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தொழிற்பரப்பில் வசித்த 17 ஆயிரம் குடும்பங்களும் அகதிகளாக இடம்பெயந்துள்ளதுடன் அங்கு இடம்பெற்ற மேற்படி சங்கத்தின் பல்வேறு தொழில் முயற்சிகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

1990ம் ஆண்டு ஜூன் மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையாலும் 1991 அக்டோபர் மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையாலும் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தொழிற்பரப்பில் வசித்த மூன்றில் இரண்டு பங்கு மக்கள் இடம்பெயர்ந்தனர்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் மேற்படி தொழிற்பரப்பில் வசித்த அனைத்துக் குடும்பங்களுமே அகதிகளாக மாறியுள்ளனர்.

அதுமட்டுமன்றி மேற்படி தொழிற்பரப்பில் இயங்கிய தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிளைநிலையங்கள், புடவை நிலையங்கள், இரும்பு விற்பனை நிலையங்கள், புடவை ஆலைகள், கால்நடைப் பண்ணைகள் போன்ற சகல முயற்சிகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. (86)

# ★ யாழ். மாவட்டத்தில் 6 மாதத்திற்கு தேவையான

## ம. எண்ணை, சவர்க்காரம் கையிருப்பில்

(யாழ்ப்பாணம்)

ஆறு மாதங்களுக்குத் தேவையான மண்ணெண்ணையும், சவர்க்காரமும் யாழ். மாவட்டத்தில் தற்போது இருப்பில் இருப்பதால், தட்டுப்பாடு நிலவுவதற்கு எந்தவொரு காரணமும் இல்லை.

மொத்த வியாபாரிகளிடம் மண்ணெண்ணையும், சவர்க்காரமும் மிகக் கூடுதலாகக் கையிருப்பில் இருப்பதினால், அதனை விற்பனை செய்வதற்காக கொம்படிப் பாதை தடை போன்ற வதந்திகளைக் கட்டவிழ்த்து விட்டு, இக்கட்டான காலகட்டத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயல்கின்றார்கள்.

இவ்வாறு ப. நோ. கூ. சமாசப் பிரதிநிதிகள் தெரிவித்தார்கள்.

பொதுமக்கள் காரணம்..

யாழ் மாவட்டத்தில் இராணுவம் தற்போது மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளினால் பீதியடைந்த மக்கள் பெருமளவில் மண்ணெண்ணையையும், சவர்க்காரத்தையும் வாங்கிச் சேகரிப்பதனாலேயே இந்தத் தட்டுப்பாடு தற்போது ஏற்பட்டுள்ளது என்று மண்ணெண்ணை அங்காடி வியாபாரிகள் கூறினார்கள்.

ப. நோ. கூ. சங்கங்களின் கையிருப்பில் இருக்கும் மண்ணெண்ணை நேற்று பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது. யாழ். நகரில் இயங்கி வரும் தீவகப் பகுதி ப. நோ. கூ. சங்கங்கள் 5 லீற்றர் வீதம் பொதுமக்களுக்கு நேற்று வழக்கமான மண்ணெண்ணையை விநியோகம் செய்தது. யாழ் ப. நோ. கூ. சங்கம் திங்கட்கிழமை முதல் தமது சகல கிளைகளிலும் மண்ணெண்ணையும், சவர்க்காரமும் தாராளமாக பொதுமக்களுக்கு விநியோகம் செய்யவுள்ளது. [வி]

## இந்திய ஜனாதிபதி தேர்தல் காங்கிரஸ் வேட்பாளர் சங்கர் தயாள் சர்மா

[புதுடில்லி]

இந்திய ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக உப ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா நிறுத்தப்பட்டுள்ளதாக கட்சிப் பேச்சாளர் திரு. வி. என். காட்கில் நேற்று அறிவித்தார்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்துமாறு திரு. வி. பி. சிங் வலியுறுத்தி வந்தபோதும் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இந்திய ஜனாதிபதி தேர்தல் அடுத்தமாதம் 13ம் திகதி நடைபெறவுள்ளது. [சி]

## புலிகள் ஆதரவாளர் விரைவில் கைதாவர்!

[சென்னை]

தமிழகத்திலும், இந்தியாவின் வேறு சில பகுதிகளிலும் புலிகளின் ஆதரவாளர்கள் பலர் கைது செய்யப்படவுள்ளதாக தமிழக சட்டத்துறை அமைச்சர் திரு. கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழக பொலிசார் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் தற்போது தீவிரவாதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

## வடபகுதி யுவதியிடம் 20,000 ரூபா பறிமுதல்

(கொழும்பு)

வடபகுதி தமிழ் யுவதி ஒருவர் கொழும்பில் வழிப்பறிக்காரனிடம் 20 ஆயிரம் ரூபாவை பறிகொடுத்துள்ளார்.

புறக்கோட்டை மீன் மார்க்கட்டுக்கு அருகில் சென்றுகொண்டிருந்த இந்த வடபகுதி யுவதி தனிமையில் செல்வதை நோட்டம்விட்டு பின் தொடர்ந்த நபர் யுவதியை வெருட்டி பணத்தை அபகரித்துச் சென்றுள்ளார். [கே]

## சைக்கிள் திருட்டு

[வேலணை]

வடமாகாண வர்த்தக ஊழியர் சங்க தலைவர் திரு. நா. இராமச்சந்திரனின் துவிச்சக்கர வண்டி நேற்று திருடப்பட்டது.

யாழ். சத்திரத்துச்சந்தி கடையொன்றின் முன்னால் சைக்கிளை நிறுத்திவிட்டு தேனீர்அருந்தச் சென்றபோது அவரதுசைக்கிள் திருடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (72)

## 30 நோயாளர் தீவகம் சென்றனர்

(யாழ்ப்பாணம்)

தீவகப்பகுதிகளிலிருந்து வைத்திய பரிசோதனைக்காக யாழ். நகருக்கு வந்திருந்த 30 நோயாளர்கள் நேற்று தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்றார்கள்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இவர்களை நேற்று விசேட வாகனங்களில் பருத்தித்துறை துறைமுகத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

திருமலைக்கு நோயாளிகளுடன் சென்ற குமண கப்பல் நேற்று பருத்தித்துறைக்கு வந்ததன் நிமித்தம் தீவக நோயாளிகளை நேறு காரைநகருக்குக் கொண்டு சென்றது.

காரைநகரிலிருந்து இவர்கள் பின்பு தமது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவர். [வி]

## வடக்கு-கிழக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் கோரியுள்ளார்.

இதேவேளை வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு அரசு ஆதரவு தெரிவிக்கவில்லையென கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா கூறியுள்ளார்.

இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டுமென சகல கட்சிகளும் இணங்கியிருப்பதாக மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் சந்திரா பண்டார கூறியுள்ளார். (சி)

## சுவரொட்டி ஒட்ட தமிழகத்தில் தடை

[சென்னை]

பொது மற்றும் தனியான இடங்களில் சுவரொட்டி ஒட்டுவதை தடைசெய்து தமிழ்நாடு ஆளுநர் அவசர சட்டம் ஒன்றைப் பிறப்பித்திருக்கிறார்.

இந்தத்தடையை மீறுவோருக்கு ஓராண்டு சிறைத்தண்டனை அல்லது 5000 ரூபா குற்றம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக விதிக்கப்படும்.

கண்காட்சி, பொருட்காட்சி நடைபெறும் இடங்களில் இச்சட்டம் விலக்கப்படும். இந்தப் பகுதிகளில் சுவரொட்டி ஒட்டுவதற்கு அனுமதி பெற வேண்டும். விசேட நிகழ்ச்சிகள்பற்றி சுவரொட்டிகள் ஒட்டவேண்டுமானால் முன் அனுமதிபெற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

### புலிகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வர் ஜெயலலிதா எதிர்ப்பது அரசியல் லாபம் கருதியே அதை தமிழ்மக்களின் நன்மை கருதியல்ல தமிழ் எம் பிக்கள் மனச்சாட்சிக்கு விரோதமாக பேச முயல்கிறார்கள்.

இந்த நாட்டை ஆட்சி செய்த இரு அரசியல் கட்சிகளும் தற்போதைய நிலைமைக்கான பொறுப்பை ஏற்க வேண்டும்மெனறார். (சி)

### மண்டைதீவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குதலின் சிதறல்கள் பாதுகாப்பு வலயப்பகுதிகளான பாலம் பணிமனை, ஆஸ்பத்திரி கண் கிளினிக், இரண்டாம் குறுக்குத்தெரு ஆகிய பகுதிகளில் வீழ்ந்துள்ளது (56-75)

### 34 அகதிகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

'இன் காட்டா' அமைப்பைச் சேர்ந்தவர்களே இப்படு கொலையை மேற்கொண்டதாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது. [சி]

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு பகுதியிலிருந்து இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்க பெண் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

சந்தியா (யோகேஸ்வரி தேசிங்கம் கரவெட்டி) என்ற போராளியே வீரச்சாவு அடைந்தவராவார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## இன்று

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் புதிய முறையில் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சத்திர சிகிச்சை நிலையம் இன்று காலை சம்பிரதாய முறைப்படி வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது. [வி]

### நாடாளுமன்றில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு பிரபாகரனின் பெயரை உச்சரித்தவர்கள் இடைக்கிடை தமிழக முன்னாள் முதல்வர்களான திரு. அண்ணாத்துரை, திரு. எம். ஜி. ஆர், திரு. கருணாநிதி, மற்றும் செல்வி ஜெயலலிதா ஆகியோரின் பெயர்களையும் உச்சரித்தனர்.

பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்கவேண்டுமென தமிழ் எம். பி. க்கள் உட்பட பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரினர். [சி]

### வலிகாமம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தரிப்பு, சுளிபுரம், மூளாய் மாதகல் பகுதிகளில் பல ஷெல்கள் விழுந்துவெடித்தன.

சுழிபுரம் கல்லவேம்படியிலும், காட்டுப்புலத்திலும் ஐந்திற்கு மேற்பட்ட ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

மாதகல் மத்தியில் வீடொன்றின்மீது விழுந்து வெடித்த ஷெல்லினால் எஸ். வீரவாகு (55-வயது), சுளிபுரம் கல்லவேம்படியில் ஏ. கே. சங்கரப்பிள்ளை [70 வயது] செல்வி ஜெயரஞ்சி சபாரட்ணம் (17-வயது) ஆகியோரும் மூளாய் பிள்ளையார் கோவிலடியில் அனுஷியா (33-வயது) ஆகியோரும் பண்டத்தரிப்பில் கே. சின்னையா (65-வயது), எஸ். இந்திராணி (32-வயது) திருமதி ஆர். தனேஸ்வரி (30-வயது) உரும்பிராய் ஆகியோர் உட்பட பலர் ஷெல் தாக்குதலினால் காயமடைந்தனர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஐம்பதிற்கும் மேற்பட்ட ஷெல்கள் இப்பகுதிகளில் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. [56-72]

### ஊர்காவல் படையினர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இத்தாக்குதலில் பலியான ஊர்காவல் படையினரிடம் இருந்து 303 ரக துப்பாக்கி-1, இதற்குரிய ரவைக் கூடுகளும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

### இனப் பிரச்னை

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

தொடர்பான விவாதத்தில் பேசுகையில் இதனைக் குறிப்பிட்ட அமைச்சர் மேலும்பேசுகையில்:

எல்லா அரசியல் கட்சிகளும் அரசியல் தீர்வு காணவேண்டுமென இணங்கியிருப்பதால் இந்த சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது. இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பது அரசின் நோக்கமாகும்.

புலிகளை நிராயுதபாணிகளாக்க படையினர் முயன்று வருகின்றனர் என்றும் கூறினார். [சி]

### பதுக்கலுக்கு எதிராக

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

யுத்த நெருக்கடிக்குள்ளும் போக்குவரத்து இடர்பாடுகளுக்கு மத்தியிலும் சேவை மனப்பான்மை கொண்ட வர்த்தகர்கள், எரிபொருள் விற்பனையாளர்கள் இந்த பிரதேசத்தில் நியாயமான விலையில் பொருட்களை விற்பனை செய்யும் ஒருநிலை இருக்க, மறுபுறத்தில் தற்போதைய சூழ்நிலையிலும், தடுமாற்றத்துடனும், தத்தளிப்புடனும் மக்கள் வாழ்ந்து வருகின்ற பொழுதில் சில நியாயமற்ற வர்த்தகர்களும், எரிபொருள் விற்பனையாளர்களும் மிகக் குறுகிய நோக்கோடு அன்றாட அத்தியாவசிய உணவுப் பொருட்களையும், எரிபொருட்களையும் பதுக்கி செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி தமது சொந்தச் சகோதரர்களின் துன்பத்தையே பொருட்படுத்தாது அதனையே விலைபேசி துடிப்பவர்களுடைய வயிற்றில் அடிக்கின்ற வகையில் கொள்ளை லாப மீட்ட முற்படுகின்றார்கள்.

இவர்களின் துரோகத்தனத்தை அனுமதிக்க முடியாது, எந்த நிலையிலும் எங்கள் மக்களின் உயிர் வாழ்வதற்கான உரிமையை பறிக்கின்ற இச்சக்திகளின் நடவடிக்கைகளை ஒருபோதும் இந்தத் தேசம் ஏற்காது. எனவே பதுக்கலிலும் விலைகூட்டிவிற்கும்செயல்பாடுகளிலும் ஈடுபடாமல் எமது மக்களின் நாளைய நம்பிக்கைகளையும் சிதறடிக்காமல் நியாயத்தின் வழிநின்று நியாயமானவகையில்பொருட்களை வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

கொள்ளை இலாபமடிக்கும் நோக்கில் ஈடுபடும் இவர்களால் திட்டமிட்டுப் பரப்பப்படும் வதந்திகளை நம்பி எரிபொருளையும், உணவுப் பொருட்களையும் கூடுதலாக சேமித்துவைக்கும்நோக்கோடு அலைந்து, கூடுதல் இலாபமீட்டும் வர்த்தகர்களுக்கு துணை போவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.


## மரண அறிவித்தல்

### அப்பாசி செல்லத்துரை (தம்பு)

அப்பாசி செல்லத்துரை (தம்பு) காலமாகிவிட்டார். அன்னார் ஈவினை புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்தவரும், செ. சின்னட்டிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செ. பொன்னுத்துரை (நடராசா), சி. இராசம்மா (பாக்கியம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செ சிவகுருநாதனின் (இளைப்பாறிய அரசாங்க லிகிதர்) அன்பு மாமனாரும், சி. கேஸ்தீஸ்வரன் (கனடா), சி ஆனந்தராஜா (பிரான்ஸ்), சி. கணேஸ்வரன் (கனடா), சி. மீனும்பிகை ஆகியோரின் அன்புப் பேரனுமார். அன்னாரின் பூதவுடல் ஈமைக்கிரியைகளுக்காக வெள்ளிக்கிழமை (19-6-92) நண்பகல் 12-00 மணிக்கு ஈவினை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. சிவகுருநாதன்.

ஈவினை,
புன்னாலைக்கட்டுவன். [6437]



இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூன் மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News paper at the General Post office Srt Lanka under Licence Nnmber B/10:36/86